விலை ரூபா 3-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 புரட்டாதி: 26 ற. அவ்வல் பிறை: 22 இதழ்: 170
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 12-10-1990

## வடமராட்சியில் தொடரும் ஹெலி தாக்குதல்கள்

(வடமராட்சி)

வடமராட்சியின் பலபகுதிகளில் ஹெலித் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பொலிகண்டி, வல்வை, தொண்டமானறு போன்ற இடங்களில் ஹெலிக்கொப்டரிலிருந்து ஷெல், ரொக்கெட், 50 கலிபர் தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டது. (51)

## கோண்டாவில் சம்பவம்: மேலும் இருவர் பலி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலின்போது படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மானிப்பாய் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இருவர் நேற்று மரணமானார்கள். இத்தாக்குதலில் படுகாயமடைந்த தகப்பனும் மகனுமான இராசரத்தினம் வரதராசா (வயது 35) அவரது மகன் வரதராசா யதீஸ்வரன் (வயது 2) ஆகிய இருவரும் வைத்தியசாலையில் நேற்று முன்தினமிரவு மரண

[4-ம் பக்கம் பார்க்க]

## ஆண்கள் பெண்கள் உட்பட

# கொழும்புக்குசென்ற தமிழர்கள் நூற்றுக்கணக்கில் கைது!

## தடுத்து வைத்துவிசாரணை

[கொழும்பு]

**வடக்கு-கிழக்கிலிருந்து கொழும்புக்கு சென்றுள்ள தமிழர்களில் இருநூறுக்கும்அதிகமானோர் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவல்களில் வைத்து தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகிறார்கள்.**

வடக்கிலிருந்து கடந்த சில தினங்களில் பெருமளவு தமிழர்கள் கொழும்பு வந்துள்ளனர் இதில் பலர் ஆயுதங்கள், வெடிமருந்துகளை கடத்தி வந்துள்ளதாக கிடைத்த இரகசிய தகவல்களையடுத்தே நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

மேலும் கொழும்பு வரும் தமிழர்களை உடனடியாக தாம் தங்கியுள்ள பகுதிக்கு அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவுசெய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

தமது பெயர் விபரங்களைப் பதிவுசெய்யச் சென்ற பலரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலை செய்யப்படுபவர்கள் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கைதானவர்களில் பெண்களும் பெருமளவில் அடங்குவர். மேலும் ஹோட்டல்கள், விடுதிகளிலும் பொலிஸார் பலத்த தேடுதலையும் சோதனைகளையும் மேற்கொண்டுள்ளனர். (சி)

## வடக்கு-கிழக்கில் தாக்குதல் தொடரும்

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்ட சில பகுதிகளில் தொடர்ந்தும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாகவே தற்போது அங்கு தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வடமராட்சி, தென்மராட்சிக்கு மூன்று மணிநேரம் பரீட்சார்த்த மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளுக்கு நேற்று மூன்று மணிநேர பரீட்சார்த்த மின்சாரம் வழங்கப்பட்டது

இப்பகுதிகளில், ஒயில் உள்ள ரான்ஸ்போமர்களுக்கு மாத்திரமே மின்சாரம் வழங்கப்பட்டது. இம் மின்சாரம் நண்பகல் 12 மணிமுதல் 3 மணிவரை வழங்கப்பட்டது.

இதேவேளை கோப்பாய் பகுதியிலுள்ள ரான்ஸ்போமர்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டதாயினும் அண்மையில் ஹெலித்தாக்குதலினால் அறுந்துள்ள மின்வயர்களில் திருத்த வேலைகள் இருப்பதனால் திருத்த வேலைகள் முடிவுற்றதும் மின் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பலாலியிலிருந்து பண்டத்தரிப்பை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல்

(பண்டத்தரிப்பு)

பலாலி இராணுவமுகாமிலிருந்து கடந்த புதன்கிழமை ஏவப்பட்ட இரு ஆட்டிலறி ஷெல்கள் பண்டத்தரிப்பில் விழுந்து வெடித்தன.

வயல் வெளியில் விழுந்து வெடித்தமையால் சேதம் ஏற்படவில்லை.

இதேவேளை சேந்தாங்குளம் கடல் பகுதியிலிருந்து கடற்படையின் பீரங்கிப்படகிலிருந்து நேற்றிரவு சரமாரியான பீரங்கித் தாக்குதல் கரைப்பகுதியை நோக்கி இடம்பெற்றது. சீ பிளேன் ஒன்றும் இப்பகுதியில் தாழப் பறந்து நோட்டம் விட்டது. (72)

## "விடுதலைப்புலிகளுடன் நிபந்தனையுடன் மட்டுமே இனிமேல் பேச்சுவார்த்தை"

### அமைச்சர் ரஞ்சன்

(கொழும்பு)

''விடுதலைப் புலிகளுடன் இனிமேல் நிபந்தனையுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தப்படும்'' என்று பாதுகாப்பு இணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

''புலிகளுடன் இனிமேல் பேசுவதாக இருந்தால் அவர்கள் ஆயுதங்கள் ஒப்படைத்த பின்னரே அதுபற்றித் தீர்மானிக்கப்படும்'' அதுவரைக்கும் பேச்சுவார்த்தை என்ற சொல்லுக்கே இனிமேல் இட

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ முகாம் மீது தாக்குதல்

(திருமலை)

திருமலைப் பகுதியிலுள்ள இறக்கண்டி என்னும் இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்றுப் பலத்த ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை சேத விபரங்கள் தெரியவில்லை. (வி)

## மிதிவெடியில் சிக்கி அறுவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணை தாம்போதி பாலத்தடிப் பகுதிக்குச் சென்ற ஆறுபேர் மிதிவெடியில் அகப்பட்டு ஒருவர் இடது காலை இழந்தார் ஐவர் படுகாயம் அடைந்தனர்.

நேற்று முன்தினமிரவு (புதன்) இடம் பெற்ற இச் சம்பவத்தில் புங்குடுதீவு மூன்றும் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா கணபதிப்பிள்ளை (வயது 60) என்பவரே காலையிழந்தவராவர்.

மார்க்கண்டு நாகேந்திரன் (வயது 35) தம்பு இராரத்தினம் (வயது 46). குமாரசாமி சத்தியசிலன் (வயது 0), கணேஸ்தம்பிராசா (வயது35), எஸ். சண்முகலிங்கம் (வயது 50) ஆகியோர் படுகாயமடைந்தனர். (56)

## பொறிவெடியில் சிங்கள ராணுவம் சிக்கியது

(மட்டுநகர்)

சித்தாண்டிப் பகுதியில் சிங்கள இராணுவம் ரோந்து சென்றபோது விடுதலைப் புலிகளின் பொறிவெடியில் சிக்கி பலர் காயமடைந்ததுடன் ஒருவர் காலையும் இழந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## அதிகாரப் பரவலாக்கல் இன்று சர்வகட்சி மாநாடு

(கொழும்பு)

வடக்கு - வடக்கு பகுதிக்கு அதிகாரம் பரவலாக்கப்படுவது தொடர்பாக அனைத்து கட்சி மாநாடொன்று இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டை ஜனாதிபதி திரு. பிரேமதாஸா கூட்டியுள்ளார். கொழும்பிலுள்ள தமிழ் கட்சிகளுக்கும் முஸ்லிம் கட்சிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வியடைந்ததையடுத்து ஜனாதிபதியால் இம்மாநாடு கூட்டப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பாகவும் முக்கியமாக ஆராயப்படவுள்ளது. எனினும்

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா, முல்லைத்தீவு
# அரச ஊழியர் யாவரும் வேலைக்கு திரும்பவேண்டும்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள வன்செயல் காரணமாக இடம் பெயர்ந்து, யாழ். நகருக்கு வந்துள்ள அரச ஊழியர் பொதுமக்கள் நன்மைக்கு தத்தமது காரியாலயங்களுக்கு செல்லுமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் உள்ள அரச ஊழியர்கள் அனைவரும் சேவைக்குச் செல்லவேண்டும்.

ஆனால், தென் இலங்கை கிழக்கிலங்கைகளில் சேவையாற்றும் அரச ஊழியர்கள் நிலைமையை அவதானித்தும், போக்குவரத்துச் சேவைகள் சீரடைந்த பின்பு தமது கடமைக்குச் செல்லலாமெனவும் கூறப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (வி)

# தரமான பாண் தயாரிக்க கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தையில் முன்பக்கத்தில் வைத்து பேக்கரி உரிமையாளர்கள் தாம் உற்பத்தி செய்த பாணை போட்டாபோட்டியாக விற்பனை செய்து வருகின்றார்கள். இவற்றில் பெரும்பாலானவை அரைகுறை வேக்காட்டுடன் மிகவும் குறைந்த நிறையில் இருக்கக் காணப்படுகின்றன. அத்துடன் பாணை மூடிவைத்து விற்காது வெளியில் வைத்து விற்பதால் ஈக்கள் அவற்றின் மீது மொய்ப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

பண்டத்தரிப்பு சுகாதார பரிசோதகர் திரு. பொ. பேரின்பநாதன் பாணை சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்பாக வைத்து விற்குமாறும், விலைகூடினாலும் தரமான பாணை தயாரித்து விற்குமாறும் பேக்கரி உரிமையாளர்களிடமும், பாண் விற்பவர்களிடமும் நேரில் தெரிவித்துள்ளார். (72)

# சிற்றூரவை காரியாலயம்

(கொக்குவில்)

கொக்குவில் மேற்கு சிற்றூரவை காரியாலயம் சிற்றூரவைத் தலைவர் திரு. த. அந்தோனிப்பிள்ளையினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

காரியாலய கடமைநேரம் காலை 8 மணி முதல் 9மணி வரையும், மாலை 4மணி முதல் 5 மணி வரையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (135)

# மக்கள் இடம்பெயர்வு

[புங்குடுதீவு]

ஊர்காவற்றுறையிலுள்ள இராணுவத்தினரின் கெடுபிடிகளினால் பெருந்தொகையான மக்கள் இங்கிருந்து இடம் பெயர்ந்துள்ளனர்.

புங்குடுதீவில் தஞ்சமடைந்துள்ள இம் மக்களுக்கு புங்குடுதீவு-நயினைதீவு ப. நோ. கூ. சங்க கிளைகள் மூலமாக நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுவருகிறது.

# பயனுள்ள வாழைமரம்

இன்று எமது உணவில் அதிகம் பிரசித்தி பெற்றது வாழைப்பழம். ஆரம்பத்தில் இது தென் கிழக்காசியா, இந்தோனேசியா முதலிய இடங்களிற்கே உரித்தானது. கிறிஸ்துகால ஆரம்பத்தில் வாழைப்பழம் ஆசிய மெடிற்றேனியன் தேசங்களில் செய்கைப் படுத்தப்பட்டது. உஷ்ணவலயங்களில் இவை மிகவும் செழித்து வளர்ந்தது வாழைப்பழம் வருடத்தில் எப்பகுதியிலும் பலன் தரக்கூடியது. வாழைப்பழத்தில் 74 வீதம் நீர், 20 வீதம் சீனி, 2 வீதம் புரதம் ஒன்றரை வீதம் செலுலோஸ், 1 வீதம் மற்றும் பொருட்கள் அடங்கியுள்ளது. இப்பழம் உருசியானது, இலகுவில் சமிக்கக் கூடியது. இதை உலர்த்தி ஒருவித மாவைச் செய்வார்கள். ஆபிரிக்காவில் இதன் இலைகளால் வீடுவேய்வார்கள். வாழைநாரினால் கயிறு திரிக்கப்படுகின்றது. வாழையில் 30 பிரிவுகளில் 200 இனங்கள் வரையுண்டு. இவை வித்திலிருந்து முளைப்பதில்லை. கிழங்கிலிருந்தே முளைகள் விருத்தியாகின்றது. வாழை மரம் 20-30 அடிவரை வளரும். இலைகள் 6-7 அடி நீளமாகவும் 1-2 அடி அகலமாகவும் இருக்கும். ஒரு வாழை ஒரு குலை மாத்திரமே போடும். வீட்டுக்கு ஒரு வாழை நட்டுப் பயன்பெறுவோமாக.

—க. கனகராசா.

## வடக்கில் ராணுவ நடவடிக்கை:
# 25 தேவாலயங்கள் பலத்த சேதமடைந்தது

(யாழ்ப்பாணம்)

''வடமாகாண பகுதிகளில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் இதுவரை 25க்கு மேற்பட்ட தேவாலயங்கள் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளன.''

இவ்வாறு யாழ். ஆசனக்கோவில் பங்குத்தந்தை வண. ஜெபநேசன் தெரிவித்தார். அவர் இதுபற்றி மேலும் தெரிவித்துள்ளதாவது.

ஷெல், விமான, கடல்பீரங்கித் தாக்குதல்களால், யாழ்ப்பாணம், தீவுப்பகுதி, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பகுதிகளில் உள்ள 25க்கும் மேற்பட்ட தேவாலயங்கள் பலத்த சேதமடைந்ததினால் பலகோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலான தேவாலயங்களில் இன்னும் ஆராதனைகளை நடாத்த முடியவில்லை. யாழ். குடாநாட்டில் மட்டும் ஆறு தேவாலயங்கள் சேதமடைந்துள்ளன. குருநகர் பகுதிகளில் உள்ள தேவாலயங்களேபெரும் சேதமடைந்துள்ளன. யாழ். ஆசனக்கோவில் பலத்த சேதத்துக்குள்ளானதால் பல லட்சம் ரூபாவிற்கு சேதமேற்பட்டுள்ளது.

மேற்படி விடயம் சம்பந்தமாக விரிவான அறிக்கையொன்றை கொழும்பிலுள்ள பாப்பரசரின் பிரதிநிதியூடாக நாம் வத்திக்கானுக்கு அறிவித்துள்ளோம். எனக் கூறினார். (வி)

## சுகாதார ஊழியருக்கு
# செப்டம்பர் சம்பளம் வழங்கப்படவில்லை

(பண்டத்தரிப்பு)

யாழ். பிரதேச சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு கடந்த செப்டெம்பர் மாதத்திற்கான சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை. யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள 65 அரசாங்க வைத்தியசாலைகளின் ஊழியர்களுக்கும் மற்றும் சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கும் சம்பளப் பணம் வழங்குவதற்கு சுமார் முப்பது இலட்சரூபாய் தேவைப்படுவதாகவும், இனி யாழ்வரும் கப்பலில் இதற்கான பணம் கொழும்பிலிருந்து கொண்டு வரப்படும் பட்சத்தில் கடந்த செப்டெம்பர் மாத சம்பளப் பணம் ஊழியர்களுக்கு வழங்கப்படுமென்றும் யாழ். பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலக உயரதிகாரி ஒருவர் இதுபற்றி தகவல்தருகையில் தெரிவித்தார். (72)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை லெப். சாள்ஸ்
[பூபாலசிங்கம் சாந்தகுமார்]
(2-வது லெப். சாள்ஸ்)

தமிழீழ மண்ணில்
ஜனனம்:
20-6-65

தாயக
மண் மீட்புக்காக:
12-10-87
வீரசொர்க்கம்

தியாகத் தீபங்களே
தீராதி தீர சூரப் புலிகளே
உங்களில் ஒருவன்
மங்காத புகழுடை சாள்ஸ்
கோட்டைக் கருகினிலே
எம் மண்ணுக்காய் மூச்சுவிட்டு
மூன்று வருடங்கள் இன்று
கோட்டையிலே புலிக்கொடி
சாள்ஸ் உன் வீரமும் அங்கே
விரிந்து பறக்குதடா!

தென் மட்டுவில் மக்கள்
(ஏ 825)

# வடமராட்சி பாடசாலைகள் திங்கள் முதல் ஆரம்பம்

(வடமராட்சி)

வடமராட்சியிலுள்ள பாடசாலைகள் பல இயங்கத் தொடங்கியுள்ளன.

கடந்த திங்கள் முதல் இப்பாடசாலைகளில் ஆறும் வகுப்புக்குட்பட்ட வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (51)

## இன்று முதல்
# 3ம்கட்ட நிவாரணத்திற்கான பெர்மிட் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்கான 3ம் கட்ட இலவச நிவாரணப் பொருள்களுக்கான பெர்மிட் இன்று முதல் வழங்கப்படவிருக்கிறது.

நேற்றுமுன்தினம் யாழ். கச்சேரியில் நடைபெற்ற உணவு பங்கீட்டு விநியோக முன்னேற்றம் சம்பந்தமாக கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இன்று தொடக்கம் இம் மாதம் 22ம் திகதிவரையுள்ள கால எல்லைக்குள் நிவாரண உணவுப்பொருட்களை வழங்குமாறு ப. நோ. கூ. சங்கங்களுக்கும் உதவி அரசாங்க அதிபர்களுக்கும் யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

வேலைவாய்ப்பு இழந்தவர்களுக்கு 2ம் கட்ட நிவாரணம் இந்தக்கால எல்லைக்குள் வழங்கப்படவிருக்கிறது.

3ம் கட்ட நிவாரணப் பொருட்கள் பழைய அளவு அட்டவணையின்படியே வழங்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது. (153)

# வறட்சியால் பயிர் பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்குப் பகுதியில் விவசாயிகள் விதைத்த நெற்பயிர்கள் மழையின்மையால் அழிந்துபோகும் நிலையில் உள்ளது. மிகவும் கஷ்டப்பட்டு உழுது, விதைநெல் தேடி வாங்கி விதைத்த விவசாயிகள் விதைநெல் முளைத்து பயிராகிவரும் இத்தருணத்தில் மழை பெய்யாது கடுமையான வெப்பம் நிலவுவதையிட்டு மிகுந்த கவலையடைந்துள்ளனர். (72)

# உணவுப்பொருள் விநியோக கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உணவுப்பொருள் விநியோகம் சம்பந்தமாக உதவி அரசாங்க அதிபர்கள், ப. நோ. கூ. சங்கத்தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோர் பங்கு பற்றும் கூட்டமொன்று இன்று காலை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் இக் கூட்டம் நடைபெறவுள்ளது. (153)

# இராசி பலன்

12 - 10 - 1990

வெள்ளிக்கிழமை

நவமி மு. இ. 10-56 வரை, புனர்பூசம் காலை 6-11 வரை, பூசம் பி. இ. 5-13 வரை, நல்லநேரம் காலை 6-02 முதல் 7-32 வரை, ராகு காலம் பகல் 10-32 முதல் 12-02 வரை.

மேடம்: மனவேதனை, நண்பர்கள் தொல்லை, குடும்ப பகை, அலைச்சல்.

இடபம்: காரியசித்தி, பணலாபம், குடும்ப மகிழ்ச்சி, தொழில்சிறப்பு.

மிதுனம்: புத்திரர்கவலை, கருத்து மோதல், அவமதிப்பு, சகோதர உதவி.

கடகம்: அன்னியர் சகாயம், பயணங்களால் நன்மை, தாய்வழி நினைவு, மனநிறைவு.

சிங்கம்; தொழில் மந்தம், பணியாள் தொல்லை, கடன்படல், குடும்பச்சச்சரவு.

கன்னி: காரியசித்தி, பொதுப்பணி, குடும்ப மகிழ்ச்சி, பாராட்டு.

துலாம்: தொழில் போட்டி, கருத்துவேற்றுமை, விருந்துபசாரம், புதிய உறவு.

விருச்சிகம்: மனக்குமுறல், குடும்ப விரோதம், பயணம்.

தனுசு: தடுமாறுதல், சிறு விபத்து, கவலை, குடும்பத்தில் குழப்பம்.

மகரம்: நல்லோர் சிநேகம், குடும்ப மகிழ்ச்சி, சுபகாரியம், தொழில் வெற்றி.

கும்பம்: விவேகமானசெயல், பணியாள் பாராட்டு, ஆலய தரிசனம், கடித உறவு.

மீனம்: பகைவர் தொல்லை, கடன் வரவு, குடும்பசிக்கல், அலைச்சல் மிகுதி.

ஜோஸ்யர்.

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உதவுக இந்திய உள்துறை அமைச்சர் கோரிக்கை

(புதுடில்லி)

இலங்கைத் தமிழ் அகதிகளின் நலனுக்காக நிதி உதவிகளை வழங்குமாறு இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ஜனுப் முக்தி முகமட் செய்யத் தென் மாநில முதலமைச்சர்களை கோரியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று நடைபெற மாநில முதலமைச்சர்களின் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் ஜனுப் முகமட் இக்கோரிக்கையை விடுத்தார்.

தமிழ்நாடு முதல்வரைத் தவிர மேலும் ஆந்திரா, கர்நாடகா, கேரள முதல்வர்களிடமே இக் கோரிக்கையை அவர் வலியுறுத்தினுர். இது வரை இலங்கைத் தமிழ்அகதிகளுக்காக சுமார் 7 கோடி ரூபாவை மத்திய அரசுதமிழக அரசுக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித் தார். (சி)

## சகல காசோலைகளும் டிசம்பர் 31 - வரை செல்லுபடியாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ். கச்சேரியில் இருந்து ஜூன் மாதத்திலிருந்து வழங்கப்பட்ட சகல காசோலைகளும் இவ்வருடம் டிசம்பர் 31ந் திகதி வரை செல்லுபடியாகும் என்று இலங்கை வங்கி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக் கிளை முகாமையாளருக்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் அறிவித்துள்ளார். (153)

## பாகிஸ்தானுக்கான

# இராணுவ உதவியை நிறுத்த அமெரிக்க அரசாங்கம் முடிவு!

(கராச்சி)

பாகிஸ்தானுக்கான இராணுவ உதவியை முழுமையாக நிறுத்துவதென அமெரிக்க அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் அரசாங்கம் அணுவாயுத யுத்த தளபாடங்களை உற்பத்தி செய்வதில்லை யென்ற உத்தரவாதத்தை அமெரிக்க அரசுக்கு இம்மாதம் முதலாம் திகதிக்கு முன் வழங்க மறுத்ததையடுத்து 1991ம் ஆண்டுக்கான 58 கோடி 20 லட்சம் டொலர் ராணுவ உதவியை பாகிஸ்தானுக்கு நிறுத்துவதென அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது. (ச)

## சுகாதார பரிசோதகரை நியமிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட இளைப்பாறிய பன்னிரண்டு பொதுச்சுகாதார பரிசோதகர்களின் கால எல்லை முடிவடைந்தமையால் மீளவும் ஒரு வருட ஒப்பந்தத்தில் வேலைக்கு மேற்படி பன்னிரண்டு பேரையும் நியமிக்க யாழ். பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ந. கனகசபை கொழும்பிலிருக்கும் சுகாதாரசேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்பு கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள பொது சுகாதார பரிசோதகர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவசியம் ஏற்பட்டு இருப்பதால் மேற்படி நடவடிக்கையை யாழ். பிரதேச சுகாதாரசேவைகள் பணிப்பாளர் எடுத்துள்ளார். (153)

## வங்கி நிதி மோசடி

## தடுப்புக் காவலில் பெனஸிரின் கணவர்

(கராச்சி)

பாகிஸ்தான் முன்னுள் பிரதமர் பெனுசிர் பூட்டோவின் கணவர் அஸீப் அலி நேற்று முன்தினம் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்,

உயர்நீதிமன்றமொன்றிலிருந்து வெளியேறும்போது இவர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வங்கி நிதியைக் களவாடியதாக ஜனுப் அஸீப்அலி மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, (ச)

## சம்மேளனக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் சம்மேளனத்தின் விசேட கூட்டம் இன்று 12ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு நல்லூர் சாதனு பாடசாலையில் நடைபெறவிருக்கிறது.

ஒவ்வொரு பாடசாலைக் கொத்தணிச் சம்மேளன அங்கத்தவர் இருவருடன் அந்தந்தக் கொத்தணி அதிபர்கள் தவருது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிருர்கள். (153)

## 6,000 பேருக்கு வேலை வாய்ப்பு

(கொழும்பு)

ஹம்பாந்தோட்டையில் 6000 பேருக்கு தொழில் வாய்ப்பு அளிப்பதாக அமைச்சர் எஸ். தொண்டமான் உறுதியளித்தார்.

அமைச்சின் நான்காவது நடமாடும் செயலக கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இப்பகுதியில் வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் வேலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## பதிவுத் தபால்கள் ஏற்கப்படும்

(அச்சுவேலி;

அச்சுவேலி தபால் நிலையத்தில் பதிவுத்தபால்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

அச்சுவேலியில் நடைபெற்ற விமானக் குண்டுவீச்சினுல் தற்காலிகமாக வேறிடத்துக்கு மாற்றப்பட்ட அச்சுவேலி தபால் நிலையம் மீண்டும் பழைய இடத்தில் செயற்படுவதுடன், பதிவுத்தபால்களும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

## பிரிட்டனில்

## கணவன் மீது நடவடிக்கை எடுக்க புதிய சட்டமூலம்!

(லண்டன்]

பிரிட்டனில் மனைவிமாரைக் கொடுமைப்படுத்தும் கணவர்மார்மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக புதிய சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது.

உலகின் பலபாகங்களிலும் மனைவிமாரை கொடுமைப்படுத்தும் கணவர்மார்மீது சட்டநடவடிக்கை எடுக்க பொலிசாருக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. ஆனுல் பிரிட்டனில் இது தற்போது தீவிரமாக கடைப்பிடிக்கப் பட்டுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

முறைப்பாடு செய்யப்படும் கணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது பொலிசார் மிக அவதானமாக நடந்துகொள்ள வேண்டுமென பிரிட்டிஷ் காவல்துறைக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. [ச)

# குஜ்ரால் விரைவில் இலங்கை வருவார்

(கொழும்பு)

இலங்கைப்பிரச்சனை தொடர்பா ௬ பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. இந்தர் குமார் குஜ்ரால் விரைவில் இலங்கைவரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் திரு. ஹெரத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது: ''திரு. இந்தர்குமார் குஜ்ரால் மிகவும் நல்ல மனிதர். இலங்கை விடயங்களில் மிகவும் அக்கறையுடையவராகக் காணப்படுகின்ருர்''.

நியூயோர்க்கில் நடைபெற்ற வெளிவிவகார அமைச்சர்கள் மகாநாட்டில் திரு. குஜ்ராலுடன்பேசும் வாய்ப்புக்கிட்டியது, இலங்கையில் இருந்து தமிழ் அகதிகள் இந்தியா வருவதையிட்டு அவர் மிகவும் துக்கப்பட்டார்.''

## யுத்தகால யாத்திரை

(அச்சுவேலி]

தமிழ் ஈழவிடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அரசியல் கலைகலாச்சாரப் பிரிவினுல் வலிகாமம் பிரிவில் ''யுத்தகாலயாத்திரை'' கிராமம் கிராமமாக மேற்கொள்ளப் பட்டுவருகின்றது.

போர்முரசு முழங்க கிராமங்கள் தோறும் ''யுத்த யாத்திரை''க் குழுவினர் சென்று இன்றைய அரசியல்நிலை, யுத்த காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பொருளாதார நடைமுறை தமிழ்மக்களின் அரசியல் வரலாறு, தமிழ் மக்களின் கல்வி பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் பற்றியும் பொதுமக்களின் பங்களிப்பு பற்றியும் விளக்கவுரை வழங்கிவருகின்றது. (74]

## யாழ். கல்லூரி

## தொழில்நுட்ப பிரிவு ஆரம்பம்

(வட்டுக்கோட்டை)

நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாகக் கடந்த ஜூன் மாதத்திலிருந்து மூடப்பட்டிருக்கும்வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்பப் பிரிவு வெகு விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வெகுவிரைவில் ஆரம்பிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் தொழில்நுட்பப் பிரிவு இயக்குநர் சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

சில பிரிவுகளாவது இம் மாதம் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (139)

## கொத்தணி அதிபர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சகலகொத்தணி அதிபர்களும் பாடசாலை அதிபர்களும் தத்தமது கோட்டப் பணிமனையில் இம்மாதம் 15ந் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள விசேட கூட்டத்துக்கு தவருது சமுகமளிக்குமாறு கல்விப்பணிபாளர் அறிவித்துள்ளார். (153)

## கல்வி சேவைக்கு மக்கள் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

ஆரம்பபாடசாலை மாணவர்களுக்கு இலவச கல்வி வசதியை தனியார் வீடுகளில் ஏற்படுத்திக்கொடுத்த கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின்சேவையை பொதுமக்கள் பாராட்டியுள்ளார்கள்.

கலைவாணி வித்தியாசாலை உட்பட இயங்காதிருந்த சில ஆரம்பபாடசாலைகளின்மாணவர்கள் இந்த கல்வி நிலையத்தில் கற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டனில்

## மனக்கணக்கு விவேகம் பற்றி விசித்திரமான மதிப்பீடு;

(லண்டன்)

பிரிட்டனில் அக்டோபர் எட்டாம் திகதி மக்கள் மத்தியில் மனக்கணக்கு விவேகம் பற்றிய விசித்திர மதிப்பீடு ஒன்று நடாத்தப்பட்டது.

இம் மதிப்பீடு பின்னர் தரவுகளாக சேகரிக்கப்பட்டு கம்பியூட்டர் மூலம் முடிவுகள் வெளியிடப்பட்டன.

முடிவுகள் பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியதுமட்டுமல்ல எட்டாம் எண் வலிமையுடையது என்ற நம்பிக்கையும் ஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு பத்துப்பேரில் இருவருக்கு மூன்று பொருட்களை கடையில் வாங்கும்போது அதை மனதால்கூட்டிசரியான பணத்தை வழங்கமுடியாமல் இருப்பதாக கம்பியூட்டர் தெரிவித்தது.

ஆசிய நாட்டவர்களில்கல்வியறிவற்றவர்கள்கூட மனதால் சரியாக கணக்கு சொல்லும்போது ஐரோப்பிய நாடுகளில் 'கணணி'யின் தோற்றம் கல்வியை எவ்வளவு தூரம் பாதித்துவருகின்றதுஎன்பதை இம்மதிப்பீடு காட்டியுள்ளது. என கல்வியாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ச)

# குரங்கு கடித்து சிறுமிக்கு காயம்!

(பண்டத்தரிப்பு)

கடையொன்றின் வாசலில் கட்டி வைக்கப்பட்ட குரங்கு ஒன்றின் சேஷ்டைகளை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ஏழு வயதுச் சிறுமியை அக் குரங்கு திடீரென பாய்ந்து கடித்துத்தாக்கியது.

பிரான்பற்று கிராமத்தில் நிகழ்ந்த இச்சம்பவம்பற்றி மேலும் அறியப்படுவதாவது:-

ரியூஷன் வகுப்புக்கென்று சென்ற பிரான்பற்றைச் சேர்ந்த சிவலிங்கம் ராதிக்கா என்ற இச்சிறுமி வழியில குரங்கின் சேஷ்டைகளை பார்த்துக்கொண்டிருந்த போது குரங்கு திடீரெனப் பாய்ந்து சிறுமியைக் கடித்ததாகவும் கையிலும். காலிலும் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், உடனடியாக மானிப்பாயிலுள்ள யாழ். போதனு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக இவர் கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும் அறியப்படுகின்றது. (72)

## மரக்கறி விதைகள்

(வட்டுக்கோட்டை)

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வட்டுக்கோட்டைப் பிரதேச அலுவலகத்தில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினரால் மரக்கறி விதைகள் விற்பனை செய்யப் பட்டுவருகின்றன.

மக்கள் மத்தியில் வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்கப்படுத்தும் முகமாகவும் மரக்கறித் தட்டுப்பாட்டை நீக்கும் முகமாகவுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுவருகிறது.

தமிழீழ ஆய்வு நிறுவன விவசாயப்பிரிவு இணைப்பாளர் திரு. சுந்தரதாஸ் இந்த மரக்கறி விதைகளை விற்பனை செய்துவருகிருர். பெருந்தொகையான மக்கள் இந்த விதைகளை வாங்கிச் செல்கின்றனர். (139)

## மின் இணைப்பு திருத்தம்

[அச்சுவேலி]

அச்சுவேலிப்பகுதியில் விமானத்தாக்குதல்களினுல் சேதமடைந்த வீதி மின் இணைப்புக்கள் திருத்தி அமைக்கப்படுகின்றன.

விமானக் குண்டுவீச்சு, ஹெலித்தாக்குதல் ஆகியவற்றினுல் சேதமடைந்த வீதி மின் இணைப்புக்கள் பிரதேச சபை அச்சுவேலி உப அலுவலக மின்சரரப் பகுதியினுல் திருத்தி அமைக்கப்படுகின்றன.

# ''பாடசாலைகளை ஆரம்பிக்க இராணுவ நடவடிக்கையாவும் உடன் நிறுத்தப்படவேண்டும்''

(அச்சுவேலி)

''மாணவர்களின் கல்வி முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கு வசதியாக அரசபடைகளின் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். மாணவர்களின் பாதுகாப்பு நிலை உறுதிப்படுத்தப்பட வேண்டும்'' என்று அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் யாழ்.மாவட்ட கல்விப் பணிப்பாளருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்க விசேட பொதுக்கூட்டம் கல்லூரி அதிபர் அருட்சகோதரி எம். எத்தலீவா தலைமையில் நடைபெற்றது.

பாடசாலையின் கல்விமுயற்சிகளை ஆரம்பிப்பதற்கு வசதியாக அரசபடைகளின் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும், குறைந்தது பாடசாலை நடைபெறும் நேரங்களில் விமானத்தாக்குதல்கள், ஷெல் வீச்சுக்கள் நடைபெறக்கூடாது.

பாடசாலைகளின் கட்டடத் தொகுதிகளை விமானத்தாக்குதல்களுக்கு இலக்காகாமல் பாதுகாப்பதற்கு வசதியாக 'பொதுக்குறியீடு' ஒன்றைப் பிரகடனப்படுத்த வேண்டும். மாணவர்களின் பாதுகாப்பு நிலை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பனஉட்பட பல தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.((74)

## உடுவிலில் 11 பாடசாலைகளில் வகுப்புகள் நடைபெறும்

(உடுவில்)

உடுவில் கோத்தணியைச் சேர்ந்த 13 பாடசாலைகளுள் 11 பாடசாலைகள் வகுப்புக்களை மீள நடத்துவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளன.

உடுவில் கோத்தணியைச் சேர்ந்த பாடசாலைகள் ஆலோசனைக்கூட்டங்களை நடாத்தி அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளன.

தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் அகதிகள் ஏராளம் தங்கியிருப்பதனால் அவர்கள் வெளியேறும்வரை வகுப்புக்களை நடாத்தமுடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடுவில் கோத்தணியில் மேலும் 4 பாடசாலைகளில் அகதிகள் தங்கியிருப்பினும் வகுப்புகளை நடாத்தக்கூடிய சூழ்நிலையிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 15ம் திகதி திங்கள்முதல் அநேகமான பாடசாலைகள் வகுப்புக்களை மீள ஆரம்பிக்க இருப்பதாக தெரியவருகின்றது.

## காசோலையாக சம்பளம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தினால் இக்கோட்டப் பிரிவைச் சேர்ந்த சகல ஆசிரியர்களுக்கான செப்டம்பர் மாதச் சம்பளம் காசோலைகளாக இவ்வாரம் வழங்கப்பட்டுள்ளது.

கோத்தணி அதிபர்களூடாக வழங்கப்பட்ட இச்சம்பளத்தில் கடந்த 1989-ம் வருட செப்டம்பர் மாதத்திற்குரிய கஷ்ட நிவாரண ஊக்குவிப்புப் பணமாகச் சம்பளத்தின் 50 வீதப் பணமும் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (72

## ஹெலியிலிருந்து பத்திரிகை போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஹெலியிலிருந்து நேற்று பிற்பகல் கொழும்பிலிருந்து வெளியாகும் தமிழ் பத்திரிகை ஒன்று வீசப்பட்டது. இப்பத்திரிகை யாழ். நகரின் சில பகுதிகளிலும் விழுந்தது. (வி)

## சித்த மருத்துவ விரிவுரைகள் 5ம்திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை கைதடி மாணவர்களுக்கு 89—90ம் கல்வி ஆண்டிற்கான விரிவுரைகள் நவம்பர் மாதம் 5ம் திகதி ஆரம்பமாக உள்ளன. (153)

## வீரமரணம்

[திருகோணமலை]

திருமலை - வேப்பங்குளம் பகுதியில் சிங்கள இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சங்கர் என்பவர் வீரமரணமடைந்தார்.

நேற்று முன் தினமிரவு 7 மணிக்கு இச்சம்பவம் நடைபெற்றது.

## கட்டுத்துப்பாக்கி வெடித்து ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மிருகத்திற்கு வைக்கப்பட்டிருந்தகட்டுத்துப்பாக்கி தடத்தில் சிக்கிய ஒருவர் படுகாயமடைந்தார்.

பூநகரி தெளிவரைக் காட்டில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச்சேர்ந்த சிற்றம்பலம் தங்கராசா (வயது 24) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் மானிப்பாய் யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (56)

## வன்னிப் பகுதி மக்கள் வங்கி கிளைகள் அடுத்தவாரம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, பரந்தன், வவுனியா மக்கள் வங்கி கிளைகள் அடுத்தவாரம் முதல் செயற்படவுள்ளது.

பரந்தன் கிளைக் கட்டிடம் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருப்பதால் பரந்தன் நவஜீவனத்தில் மேற்படி வங்கிக் கிளை தற்காலிகமாக இயங்கவிருக்கிறது.

யாழ். மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக்கிளையில் யாழ். பிரதான வீதிக்கிளை, யாழ். நவீன சந்தைக் கிளை ஆகிய இருகிளைகளும் தற்காலிகமாக இயங்கி வருகிறது. (153)

## தேவை அறிந்து விவசாய நிலங்களில் புதிய நடவடிக்கை

(அச்சுவேலி)

காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு குடாநாட்டு விவசாயப் பயிர்ச் செய்கையில் புதிய நடவடிக்கைகளை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

வெங்காயம், பீற்றூட் போன்ற காசுப் பயிர்கள் செய்கைபண்ணப்பட்ட செம்மண் தோட்ட நிலங்களில் நெல் விதைக்கப்பட்டுள்ளது.

கிணறுகள் தோறும் ஆடு கால்ஙல் நாட்டப்பட்டு, புதிய துலாக்கள் போடப்பட்டு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

காட்சிப்பொருளாக கருதப்பட்டுவந்த நீர் இறைக்கும் பட்டை துலாக்கொடி விவசாய பாவனைப் பொருளாக பயன்படுத்தப்படுகின்றது. (74)

## மயிலிட்டி வைத்தியசாலையும் மானிப்பாயில் இயங்குகிறது

[பண்டத்தரிப்பு]

மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலை தற்காலிகமாக மானிப்பாயிலுள்ள யாழ். போதனா வைத்தியசாலையின் ஒருபகுதியில் இம்மாதம் 8ம் திகதி தொடக்கம் இயங்கி வருகின்றது.

கடந்த மூன்றுமாத காலமாக இவ்வைத்தியசாலை முற்றாக மூடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் தத்தம் இடங்களுக்கு சமீபமாகவுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் தற்காலிகமாக கடமையாற்றிவந்தது. குறிப்பிடத்தக்கது. இந்த ஊழியர்களின் சம்பளப்பணம் கடந்த மூன்று மாதகாலமாக கொழும்பிலுள்ள காசநோய் தடுப்பு அலுவலகத்தினால் அனுப்பி வைக்கப்படவில்லை.

## வல்வையில் மாவீரர் வீதி

(வடமராட்சி)

வல்வையில் மாவீரர் வீதி புதிதாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

திருவிலில் அண்மையில் கொண்டாடப்பட்ட குமரப்பா, புலேந்திரன் உட்பட இறந்த பன்னிரு போராளிகளின் மூன்றாவது ஆண்டு நினைவு விழாவின்போது வல்வைப் பிரஜைகள் குழுவினரால் புதிதாக அமைக்கப்பட்ட தூபியின் நுழைவாயில் வீதிக்கு மாவீரர் வீதி எனப் பெயர் இடப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. (51)

## தாலிக்கொடியுடன் சிக்கிய இளைஞர்

(அச்சுவேலி)

தாயின் தாலிக்கொடியை திருடிவந்து மனைவிக்கு அணிவிக்கச் சென்ற வாலிபன் இரவுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த விழிப்புக் குழுவிடம் மாட்டிக்கொண்டார்.

சந்தேகமான முறையில் இரவில் நடமாடிய நபரை விசாரணை செய்த அச்சுவேலி வடக்கு விழிப்புக்குழு கழுத்தில் தாலிக்கொடி அணிந்த நிலையில் இருந்த வாலிபரை பிடித்தனர்.

தாயின் தாலிக்கொடியை திருடிவந்து மனைவிக்கு அணிவிக்க இருந்ததாக இந்த இளைஞர் விசாரணையின்போதுதெரிவித்தார். (74)

## டீசல் திருட்டு

[பண்டத்தரிப்பு]

இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான பண்டத்தரிப்பிலுள்ள மின்மாற்றியில் இருந்து ஹெவி டீசல் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது பற்றி விடுதலைப் புலிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## வைத்திய நிலையம்

(உடுவில்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தை சேர்ந்த மருத்துவ பீட மாணவர்கள் வைத்திய நிலையம் ஒன்றை ஆரம்பித்துச் செயற்படுத்தி வருகின்றனர். காலை 5 மணிவரை பல்கலைக்கழக பாலசிங்கம் விடுதி மண்டபத்தில் தினமும் இவ்வைத்திய நிலையம் இயங்கி வருகின்றது.

## கோண்டாவிலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாயினர்.

இச்சம்பவத்தில் இறந்தோரின் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது. நால்வரைக்கொண்ட மேற்படி குடும்பத்தில் ஏழுநாள் குழந்தை மாத்திரமே தப்பியுள்ளது. (56)

## மானிப்பாயில் பாடசாலைகள் ஆரம்பம்

(மானிப்பாய்)

மானிப்பாயிலுள்ள சில பாடசாலைகள் கடந்த நான்கு மாதத்தின் பின் மீண்டும் இயங்குகின்றன.

நேற்றுமுன்தினம் முதல் இங்குள்ள சென்ற். ஆன்ஸ் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவை செயல்படுகின்றன. (71)

## பனையிலிருந்து வீழ்ந்து மரணம்

(உடுவில்)

சீவல் தொழிலாளியான ப. செல்வரத்தினம் பனைமரத்திலிருந்து தவறி வீழ்ந்ததால் மரணமானார். மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையான இவர் ஏழாலைக் கிராமத்தைச் சேர்ந்தவராவார்.

## அகதிகளுக்கு உடுபுடவை

(உடுவில்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பயிலுநர் ஆசிரியர் சங்கம் அங்கத்தவர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட உடுபுடவைகளை நவாலி மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள வெளிமாவட்ட அகதிகளுக்கும், தீவுப்பகுதியைச்சேர்ந்த அகதிகளுக்கும் வழங்கியுள்ளதாக மேற்படி சங்கத்தலைவர் திரு, ஆர். முகுந்தன் தெரிவித்தார்.

## கடும் வரட்சியினால் நெற்பயிர் பாதிப்பு

(அச்சுவேலி)

கடும் வரட்சியால் நெற்பயிர்கள் காய்ந்து கருகி மடிந்துபோகும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் பெய்த மழையின்போது விதைத்த நெற்பயிர்கள் தற்பொழுது வயல்களில் கருகி மடியும் நிலை காணப்படுகின்றது.

மழை இல்லாமல் கடும் வரட்சி காணப்படுவதால் வயல்வெளிகளில் நெற்பயிர்கள் காய்ந்து கருகி மடிந்து போகக்கூடிய நிலையில் உள்ளன.

தற்போதைய நெருக்கடி நிலையிலும் வழமையான பயிர்ச் செய்கை முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ள விவசாயிகள், காலமழை பருவ மழை பொய்த்துவிட்டதே எனக் கவலைப்படுகின்றனர்.

## அதிகாரபரவலாக்கல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இணைப்பை பல கட்சிகளும் எதிர்க்குமென எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இம்மாநாட்டில் சுதந்திரக் கட்சி, இடதுசாரி கட்சிகள் உட்பட 25 கட்சிகள் கலந்து கொள்ளுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## விவசாய அலுவலரை கடமைக்குத் திரும்புமாறு முல்லை. பணிப்பாளர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு உதவி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் அலுவலர்கள் யாவரையும் புதுக்குடியிருப்பு விவசாயபோதனாசிரியர் அலுவலகத்திற்கு இம்மாதம் 15ந் திகதியன்று சமூகமளிக்குமாறு முல்லைத்தீவு உதவி விவசாய பணிப்பாளர் திரு. க. செ.நடராசா பணித்துள்ளார்.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட விவசாய போதனாசிரியர்களும், பாதுகாவலர்களும் தத்தமது அலுவலகங்களுக்கு இதுவரைக்கும் செல்லாதவர்களை உடனடியாக கடமைக்குச் செல்லுமாறு அவர் கேட்டுள்ளார். (153)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under nuqer B/100306/81.

## விடுதலைப்புலிகளுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மில்லை.

''பிறருடைய தூண்டுதலின்பேரிலோ அல்லது எந்தவொரு நிர்ப்பந்தத்தின் பேரிலோ எதுவித பேச்சுக்களும் நடைபெற மாட்டாது'' (ச-வி)